# செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100


பயிலரங்க எண்ணிக்கைகள்: 100 நாள்: 08.08.2025

## செம்மொழித் தமிழ் மின் நூலகம்

நடத்தும்

## செம்மொழித் தமிழைச் செயற்கை நுண்ணறிவின் மூலம் (AI) நூலகங்களோடு ஒருங்கிணைத்தல்

# Integrating Classical Tamil with Libraries using Artificial Intelligence

## பயிலரங்கம் - 19

(02 .09.2025 - 04.09.2025)

### அறிவிப்பும் அழைப்பும்

மாறிவரும் அறிவியல் தொழில்நுட்பத்திற்கு ஏற்ப மொழிசார்ந்த பல்வேறு ஆய்வு முன்னெடுப்புகளைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் விரைந்து எடுத்து வருகிறது. அதிலும் குறிப்பாக, ஓலைச் சுவடிகள், தாட்சுவடிகள், அரிய பழம்பதிப்பு நூல்கள் ஆகியவற்றை எண்ணிமமாக்கல் (Digitization), எழுத்துணரியாக்கல் (OCR) முதலான பணிகளைச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் மேற்கொண்டு வருகிறது. அவ்வாறு முடிக்கப்பட்ட பணிகளைத் தமிழாய்வில் ஈடுபடுவோருக்காக மின்னூலக இணையத்தளத்தில் வெளியிட்டும் வருகின்றது. இவ்வாறு காலமாற்றத்திற்கேற்பப் புதுப்புதுத் தொழில்நுட்பங்களைப் புகுத்தித் தமிழ் மொழியை மேம்படுத்திக்கொண்டே வருகிறது

இதன் தொடர்ச்சியாக, நூலகங்களில் செயற்கை நுண்ணறிவின் தாக்கத்தை ஆராய்தல், நூலக அறிவியல் மற்றும் தகவல் மேலாண்மையில் புதுமைகள், சவால்கள், அதன் எதிர்காலத் திசைகளைப் பற்றி விவாதித்தல், பழந்தமிழ் நூல்களை

எவ்வாறு விரைவாகச் செயற்கை நுண்ணறிவின் மூலம் எண்ணிமப்படுத்துதல் முதலியவற்றை நோக்கமாகக் கொண்டு செம்மொழித் தமிழைச் செயற்கை நுண்ணவின் மூலம் (AI)நூலகங்களோடு ஒருங்கிணைத்தல் என்னும் தலைப்பில் பயிலரங்கை நடத்தச் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

இப்பயிலரங்கு, நூலகங்களில் செயற்கை நுண்ணறிவின் தாக்கத்தை ஆராய்வதற்கும், புதுமையான நடைமுறைகளைப் பற்றி விவாதிப்பதற்கும், தகவல் மேலாண்மையின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சவால்களுக்கு விடைகாண்பதற்கும் நுண்ணறிவுமிக்க விவாதங்கள், நேரடிப் பயிற்சி ஆகியவற்றின் மூலம் தீர்வைப் பெறுவதற்கும் உதவும்.

நிறுவனங்கள்/பல்கலைக்கழகம்/கல்லூரிகளில் பணியாற்றும் **நூலகர்களை** இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயனடையுமாறு செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் அன்புடன் அழைக்கிறது.

**பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:**

- பயிலரங்கில் கலந்துகொள்ள **அனுமதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை – 50**
- பயிலரங்கு நடைபெறும் நாட்கள்: 02.09.2025 **முதல்** 04.09.2025 **வரை 3 நாட்கள்.**
- பயிலரங்கு நேரம்: **காலை** 10.00 - 1.00 **&** **மாலை** 2.00 - 5.00.
- பங்கேற்பாளர்கள் தங்குமிடத்தைத் தாங்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும்.
- பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படியும் நாட்படியும் செம்மொழி நிறுவன விதிமுறைகளின் படி வழங்கப்படும்.
- பங்கேற்பாளர்களுக்கு மதிய உணவும் தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
- பயிலரங்கில் கலந்துகொள்வோர் **மடிக்கணினியோடு வருதல் நன்று**.
- பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் இணையவழியில் விண்ணப்பிக்க வேண்டும்.
- இணையவழி விண்ணப்பத்தை **https://forms.gle/Hm3UmwkGwXn8yLwe9** என்ற இணைப்பின் வழியாகவோ அல்லது கீழ்வரும் விரைவுத் தகவல் குறியீடு மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

- நிறைவு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் வந்துசேர வேண்டிய இறுதி நாள் **21.08.2025** காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்கப்படமாட்டா.
- செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **22.08.2025** அன்று மின்னஞ்சல்/புலனம் வழியாக மட்டும் அழைப்பாணை அனுப்பி வைக்கப்படும்.
- இப்பயிலரங்கில் பங்கேற்போர் **10 அமர்வுகளிலும்** தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதமோ இடைநிற்றலோ இருப்பின் நாட்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.

- செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

**இயக்குநர்**